**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.83/2024**

நாள் : 10.03.2026

வா.சா.1 – விண்மணி

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

நாரணப்பநாயக்கருக்கு இரண்டு மகன்கள் என்றால் – சரிதான். ஒருவர் என் தந்தை போலப்ப நாயக்கர் என்றும், இன்னொருவர் குருசாமிநாயக்கர் என்றுசொன்னால் – சரிதான். உங்கள் தந்தை போலப்ப நாயக்கருக்கு வாதிகளாகிய நீங்களும், 1ம் பிரதிவாதியும் வாரிசுகள் என்றுசொன்னால் –சரிதான். உங்களது தாத்தா நாரணப்பநாயக்கர் 1954ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் – சரிதான். நாரணப்பநாயக்கர் இறந்துவிட்ட பின்னர் உங்கள் தந்தை போலப்ப நாயக்கரும், குருசாமி நாயக்கரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் –சரிதான். குருசாமிநாயக்கரும் உங்களது தந்தை போலப்பநாயக்கரும் 1956ம் ஆண்டு வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் –சரிதான். பிராது 3வது தபசில் 1வது இலக்க சொத்தை போலப்பநாயக்கரும், குருசாமிநாயக்கரும் கிரையம் பெற்றார்கள் என்றுசொன்னால் –சரிதான்.

அதேபோல் பிராது 5 மற்றும் 6 தபசில் சொத்துக்களை போலப்பநாயக்கர் கிரையம் பெற்றார் என்றால் – சரிதான். 1ம் வாதி கஸ்தூரிக்கு 1964ல் திருமணம் ஆகிவிட்டது என்றால் – சரிதான். அவர்கள் திருமணத்திற்கு சீர்வரிசை செய்தார்கள் என்றால் – சரியல்ல. உங்களது அக்கா 1ம் வாதிக்கு 40 பவுன் நகை மற்றும் சீர்வரிசைகள் எல்லாம் திருமணத்தின்போது செய்தார்கள் என்றால் – இல்லை. உங்களுக்கு 1969ல் திருமணம் நடைபெற்றது என்றால் – சரிதான். உங்களுக்கும்

திருமணத்தின்போது 40 பவுன் நகை மற்றும் சீர்வரிசைகள் செய்யப்பட்டது என்றால் – இல்லை. 3ம் வாதி சந்திராவிற்கும் 1974ல் திருமணம் நடைபெற்றது என்றால் – சரிதான். அவருக்கும் திருமணத்தின்போது 40 பவுன் நகை மற்றும் சீர்வரிசைகள் செய்யப்பட்டது என்றால் – இல்லை. திருமணத்திற்கு பின்பு மேற்கண்ட மூன்று வாதிகளாகிய நீங்கள் அவரவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறீர்கள் என்றால் – சரிதான். உங்களது அப்பா 1981ல் இறந்துவிட்டார் என்றால் – சரிதான். உங்களது தந்தையின் சகோதரர் குருசாமி 1978ல் இறந்துவிட்டார் என்றால் – சரிதான். உங்களது அம்மா கெங்கம்மாள் 1969ல் இறந்துவிட்டார் என்றால் – சரிதான்.

உங்கள் தகப்பனார் 1979 ஆண்டிலேயே தனது சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார் என்றால் – இல்லை. அதிலிருந்து 1ம் பிரதிவாதி பெயருக்க அந்த சொத்துக்களைப் பொறுத்து பட்டா மாறிவிட்டது என்றால் – அவ்வாறு இல்லை, அவர்களே மாற்றிகொண்டார்கள். அதேபோல் தபசில் சொத்துக்கள் அனைத்திற்கும் 1ம் பிரதிவாதிதான் வரி செலுத்தி வருகிறார் என்றால் – இல்லை. 1956ம் ஆண்டு ஏற்பட்ட வாய்கார பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதியும், குருசாமிநாயக்கரின் மகன் குமாரசாமியும் 1981ம் வருடம் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிகொண்டார்கள் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி தியாகராஜனும், குமாரசாமியும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர் தனித்தனியே அனுபவித்து வந்தார்கள் என்றால் – அவ்வாறு இல்லை, 1ம் பிரதிவாதி தியாகராஜனும், நாங்களும் கூட்டாக அனுபவித்து வந்தோம். 10.11.2008ல் தனது பாகத்திற்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்களை இராஜேந்திரபாத்மா அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் – அதுபற்றி

எனக்கு தெரியாது. அதேபோல் 24.03.2009 ல் 1ம் பிரதிவாதி, துலுக்கன்குறிச்சியில் உள்ள நிலங்களை விற்பதற்கு இராமர்பாண்டி என்பவருக்கு பவர் எழுதிகொடுத்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்டவாறு பவர் எழுதிகொடுத்த விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் – தெரியாது. அந்த பவர் பத்திரத்தில் 1ம் வாதியின் கணவர் நவநீதகிருஷ்ணன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 15.03.2010 ல் 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியமான 3.14 ஏக்கரை 1ம் வாதி கஸ்தூரிக்கு பதிவு செய்யப்பட்ட தான ஆவணமாக எழுதிகொடுத்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தானத்தை 1ம் வாதியும் ஏற்றுகொண்டுவிட்டார் என்றால் – இல்லை. அந்த தான செட்டில்மென்டில் 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தானமாக கொடுத்துள்ளார் என்று குறிப்பிட்டு எழுதிகொடுத்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது.

அதேபோல் அதற்கு பின்னிட்டு 1ம் வாதி மேற்கண்ட நிலங்களையெல்லாம் விற்றுவிட்டார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. 15.03.2010ம் ஆண்டில் 1ம் பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலங்களை விற்றுள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. 12.10.2011ம் தேதி 1ம் பிரதிவாதி தனக்கு சொந்தமான நிலங்களை சாந்தி என்பவருக்கு விற்றுள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்திலேயும் 1ம் வாதியின் கணவர் நவநீதகிருஷ்ணன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 06.02.2020ம் தேதி 4வது தபசில் சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 76 ½ சென்ட் நிலத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி கார்த்தீஸ்வரிக்கு விற்றுள்ளார் என்றால் – சரிதான். கிரையம் பெற்ற 2ம் பிரதிவாதி

கார்த்தீஸ்வரி பெயரில் பட்டாவும் மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் – சரிதான்.

28.02.2020ம் தேதி 5 வது தபசில் சொத்தை ஏக்கர் 1.70 ½ சென்ட் நிலத்தை 3ம் பிரதிவாதி ஹே மாவுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் – சரிதன். மேற்கண்ட கிரையப்பத்திரமான வா.சா.ஆ.7ல் 1ம் வாதியும் அவருடைய கணவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் தபசில் 6 வது சொத்தை 08.12.2020ம் தேதி 1ம் பிரதிவாதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ.8 மூலம் 4,5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் – சரிதான். அந்த பத்திரத்தில் 3ம் வாதியின் கணவர் சுப்புராஜ் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் – அதுபற்றி எனக்கு தெரியாது.

தபசில் சொத்துக்கள் அனைத்தையும் 1ம் பிரதிவாதி 1983ம் வருடத்திலிருந்து தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் – அது தவறு. நீங்கள் தாலுகா அலுவலகத்தில் 26.07.2023ம் தேதி மேற்கண்ட ஆவணங்களால் ஏற்பட்ட பட்டாக்களை ரத்து செய்யவேண்டி மனு கொடுத்தீர்கள் என்றால் – சரிதான். உங்களது அந்த மனு நிராகரித்துவிட்டார்கள் என்றால் – அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. தபசில் சொத்துக்களை நீங்கள் ஒருபோதும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் – அது தவறு. தபசில் சொத்துக்களை நீங்கள் குத்தகைக்கு விட்டதாகவும் அதன் மூலம் குத்தகை பணம் பெற்றதாகவும் பிராது மற்றும் நிருபணவாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதியை நிருபணம் செய்யும் விதமாக ஆவணம் எதுவும் உங்களால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் – சரிதான், நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்தோம். இந்த வழக்கிற்காகதான் அவ்வாறு கூட்டாக அனுபவித்து வந்தோம் என்று சொல்கிறீர்கள் என்றால் –

சரியல்ல. எந்த ஒரு காலகட்டத்தில் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவிக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் – சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் செய்த விவரங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் என்றும், தெரியாது என்று பொய்யாக வழக்கிற்காக சொல்கிறீர்கள் என்றால் – சரியல்ல. அதனால் இந்த வழக்கில் நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் உங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் – சரியல்ல.

**3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.